**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு**

முன்னிலை: திரு. ப.இரமேஷ், பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் தேதி புதன்கிழமை

**அ.வ.எண். 58/2023**

**CNR.No. TNTJ15-000064-2023**

துரைசாமி ...வாதி

–எதிரி–

1.சிவசாமி
2.சந்திரகாசன்
3.ரகுநாத்
4.மலர்கொடி
5.பாலச்சந்திரன்
6.சந்திரகலா
7.உமாமகேஸ்வரி
8.சதாசிவம் .... பிரதிவாதிகள்

( இந்நீதிமன்றம் IA No.162/2023–ல் கடந்த 19.08.2025 அன்று பிறப்பித்த உத்தரவின்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

இவ்வழக்கு என் முன்பு 11.03.2026 இன்று விசாரணைக்காக வந்ததில் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சந்திரமௌலி அவர்களும், 1, 4 to 8 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஸ்வநாதன் அவர்களும், 2, 3 பிரதிவாதிகள் மைனர் என்பதால் அவரது இயற்கை காப்பாளருமான சிவகாமி அவர்களும். இவ்வழக்கின் இடைநிலை மனு எண்.162/2023 (U/O.39 R1 & 2 of CPC) திருத்தம் செய்வதற்காக வாதி அழைத்தும் ஆஜராகாமலும், வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாத காரணத்தால் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்துவந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>தீர்ப்புரை</u>

தாவா சொத்துக்களான 'A' Scheduled மற்றும் 'B' Scheduled சொத்திற்குள் வாதியின் அமைதியான அனுபவத்தையும் சுவாதீனத்தையும், 1 முதல் 8 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ தாவா வழக்கு முடியும் வரை எந்தவிதரமான குறுக்கீடோ, இடையூரோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் இடைநிலை மனு எண்.162/2023(U/O.39 R1 & 2 of CPC) தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் போதுமான வாய்ப்பு வழங்கப்பட்டும் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை. வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவம் இல்லை எனவே, சிவில் நடைமுறைச் சட்டத்தின் விதி 18–இன் கீழ் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுதொகை இல்லை.

2026 –ஆம் மார்ச் திங்கள் 11ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவையாறு.